**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். STC. 321 /2022**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜாமணி | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : கன்னியப்பன் | சமயம் | : |
| கிராமம் | : ஆர்காம்பூண்டி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 55 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.சித்ரா W.Gr.I-2665 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

**1.** நான் ஆர்காம்பூண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் காயம் பட்ட நபர் சண்முகம் எனக்கு தெரியும். 2017ம் வருடம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் ஆர்காம்பூண்டி ஏரிக்கரையில் விபத்து நடந்தது. நான் ஏரிக்கரை வழியாக நிலத்திற்குள்ளாக சென்று விட்டேன். சற்று நேரம் கழித்து சாலையில் டம் என்று சத்தம் கேட்டது. வந்து பார்த்தேன். அப்போது சண்முகம் விபத்தில் அடிபட்டு கீழே கிடந்தார். நான் தூக்கி பார்த்தேன். அங்கு விபத்தில் மோதிய 14 நெம்பர் அரசு பேருந்து நின்று கொண்டிருந்தது. அடிபட்ட சண்முகம் சுயநினைவு இல்லாமல் இருந்தார். தண்ணீர் கொடுத்தேன். பின்னர் மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். மருத்துவணையில் இருந்தபோதும் சண்முகத்தை சென்று பார்த்தேன். நான் சென்னைக்கு வேலைக்காக சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்குவிசாரணை:**

**2.** காயம் பட்டவர் என் ஊர்க்காரரா என்றால் ஆமாம். எனக்கு பங்காளி முறையில் அண்ணன். விபத்து நடந்த இடம் ஏரிக்கரை என்பதால் குறுகிய பாதை என்றால் ஆமாம். பொதுவாக அந்த இடத்தில் வாகனங்கள் மெதுவாக போகும் என்றால் ஆமாம். நான் போய் பார்த்தபோது சண்முகத்தின் வாகனத்தை தவிர வேறு வாகனம் இல்லை என்றால் பஸ் இருந்தது. நிலத்தில் இருந்தபோது டம் என்று கேட்ட இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால்

30 மீட்டர் தூரம் இருக்கும். யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் அது எனக்கு தெரியவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.